# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2006 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, நவெம்பர் மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

## 2006 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு நவெம்பர் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச.வ.- ஓ. 20/2004

### அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிதியமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிதியத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங் களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத் துக்கெனத் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிதியமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியத்தில் தற்போது உறுப்பினர்களாகவுள்ளவர்களும், அல்லது இத்தால் அமைக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத் தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அனுராதபுர ஜய சிறீ மகாபோதி அபிவிருத்தி நிதியம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம்

என்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையைத் திருத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) புனித ஜய சிறீ மகாபோதியைச் சுற்றிவர றன்வெற்ற ஒன்றை (தங்கவேலி) நிர்மாணித்தலும், பேணுதலும் அவசியமாகும்போது அதனைப் பழுதுபார்த்தலை பயனுறுத்துதலும் ;

(ஆ) ஜய சிறீ மகாபோதியின் சுற்றுப்புறச் சூழலில் பௌத்த கலாசாரப் பாரம்பரிய கிரியைகளைப் புரிவதை உறுதிப்படுத்துதலும் அதற்கு வசதிசெய்து கொடுத் தலும் ;

(இ) புனித ஜய சிறீ மகாபோதியின் வளவுகளுக்கு வெளியே உள்ள பிரதேசத்தை பௌத்த, தொல்பொருளியல், வரலாற்றுத் தொல்பொருட்களையும், சூழலையும் பாதுகாக்கும் விதமாகப் பேணுதலும் அப்பிரதே சத்தை நிலவளப்படுத்தலும், ஏனைய பேணல் மற்றும் அபிவிருத்தி வேலையைத் தொல்பொருள் திணைக் களத்தின் அங்கீகாரத்தின் கீழும் மேற்பார்வையின் கீழும் திட்டமிடலும் அவற்றை அமுல்படுத்தலும் ;

(ஈ) புனித ஜய சிறீ மகாபோதியின் வளவுடன் சம்பந் தப்பட்ட கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான திட்ட மொன்றை உருவாக்குதலும் இயைபான அதிகாரி களுடனான ஆலோசனையுடன் புதிய சுற்றுப்புறச் சூழலொன்றை ஏற்படுத்துதலும் ;

(உ) நிதியத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லு முகமாக பொருட்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்கு கள் என்பனவற்றை நடாத்துதலும் வெளியீடுகளை வேறு செயற்பாடுகளை வெளிக்கொணருதலும் கொண்டுநடாத்துதலும் ;

(ஊ) புனித ஜய சிறீ மகாபோதி உட்பட அட்டமத்தானம் மற்றும் அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அட்டமத்தானங்களோடு தொடர்புபட்ட ஏனைய வழிபாட்டு இடங்களின் நலனுக்காக உதவுதலும் புத்தசாசன நிலைபேற்றினைப் பரப்ப சகல நடவடிக்கைகளையும் எடுத்தலும் ;

(எ) தொல்பொருள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழும் மேற்பார்வையின் கீழும் ஜய சிறீ மகாபோதியைச் சுற்றிவர றன்வெற்ற நிர்மாணிப்பதோடு தொடர்புபட்ட ஏதேனும் நடிவடிக்கைக்கு உதவுதல் ;

(ஏ) பௌத்த மதத் தத்துவங்களையும் அதனால் பிரசாரம் செய்யப்படும் நல்லொழுக்க வாழ்வுமுறையையும் பாதுகாத்தலும் பிரசாரம் செய்தலும் ;

(ஐ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் உள்ள ஏனைய பௌத்த ஒழுங்கமைப்புகளுடன் சிநேகபூர்வ உறவுகளைப் பேணுதலும் ஊக்குவித்தலும்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதம போஷகராக இருக்கவேண்டியவரான வணக்கத்துக்குரிய அட்டமஸ்தானாதிபதி தேரரின் மதியுரையின்மீதும் விதப்புரையின்மீதும் மாண்புமிக்க பிரதமரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். உறுப்பாண்மை.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வரும் பதவி வழி உறுப்பினர்கள் உட்பட பத்து உறுப்பினர்களுக்குக் குறையாமலும் இருபது உறுப்பினர்களை விஞ்சாமலுமிருத்தல் வேண்டும்

(i) தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ii) மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(iii) பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி ;

(iv) அனுராதபுர மாவட்டச் செயலாளர் ; அத்துடன்

(v) தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.

(3) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் இறப்பினால், பதவிதுறத்தலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதினால் அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய அவரது நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிதாங்குதல் வேண்டும்

(4) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அதன் சார்பில் பிரதம மந்திரிக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்படும் கடிதமொன்றின்மூலம் அவரது பதவியைத் துறக்கலாம் என்பதுடன் அத்தகைய பதவிதுறத்தலானது அது பிரதம மந்திரியால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மீது பயனுறுதல் வேண்டும்.

(5) அட்டமஸ்தானாதிபதி தேரரின் மதியுரையின்மூலம் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரை உறுப்பாண்மையிலிருந்து அகற்றலாம்.

(6) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினர் இறக்குமிடத்து, பதவிதுறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து அவரது இடத்திற்குப் பிரதம மந்திரி வணக்கத்துக்குரிய அட்டமஸ்தானாதிபதி தேரரின் மதியுரையுடனும் விதப்புரையுடனும் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிதாங்குதலும் வேண்டும்.

(7) காலம் நிறைவுபெறுவதன்மூலம் பதவியை வறிதாக்கும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் மீள்நியமனத்திற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**5.** (1) உறுப்பினர்களின் பொதுக் கூட்டம் எதிலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்தப் பெறுவதற்காகவும் விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டம் ஒன்றில் அவை மாற்றப்படலாம் அவற்றிற்குச் சேர்த்துக்கொள்ளப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**6.** (1) கூட்டுத்தாபனமானது தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது, இதுகாறும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது இதன் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும் கொடை, மரணசாசனக் கையளிப்பு, உரித்துமாற்றல், நன்கொடை அல்லது உதவுதொகைகள் என்னும் வழியாகப் பெறப்படும் பணங்கள் யாவும் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்படக்கூடியவாறான வங்கிகளில் நிதியத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, நிதியத்தின் ஆதனத்தின் புனரமைப்பு, அபிவிருத்தி, மேம்பாடு என்பனவற்றுக்காக ஏதேனும் பெறுமானத் தேய்வு நிதியத்தை, ஒதுக்க நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தைத் தாபிக்கலாம்.

(3) இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் நிதியத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) எத்தன்மைத்தான மூலத்திலிருந்தேனும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் முதல் தொகை நிதியத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துக்காக மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் எப்பகுதிதானும் நேரடியாகவோ நேரடியற்றவிதமாகவோ பங்கிலாபம் என்ற வகையில், வெகுமதி என்றவகையில் அல்லது எத்தன்மைத்தான வேறு எம்முறையிலேனும் கூட்டுத்தாபன உறுப்பினர் எவருக்கும் கொடுக்கப்படுதலோ கைமாற்றப்படுதலோ ஆகாது.

*நிதியத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்பட வேண்டியவர்களான தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர், உதவிச் செயலாளர்கள் மற்றும் ஏனைய இரு உறுப்பினர்கள் ஆகிய அறுவருக்குக் குறையாத முகாமைக்குழு ஒன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது, முகாமைக் குழு, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற நிதியத்தின் உறுப்பினர்கள் முகாமைக் குழுவாதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் இடாப்பு.*

**8.** முகாமைச் சபையானது, இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்தல் வேண்டும். இதில் சட்டம் தொடங்கும் தேதியில் நிதியத்தின் உறுப்பினராக இருக்கின்ற ஒவ்வோராளும் ; அத்துடன் அதன் பின்னர் நிதியத்தின் உறுப்பினராக முறையாகச் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வோராளும் இடாப்பில் தமது பெயரைப் பதிவுசெய்வித்துக்கொள்ள வேண்டும்.

*நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டியனவும் நிதியத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிதியத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும், செலுத்தப்படற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் அச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருத்தலும் கையுதிர்த்தலும்.*

**10.** ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, மரண சாதனக் கையளிப்பு என்பன மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலுடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

*ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் நிதிகளை முதலீடு செய்வதற்குமான கூட்டுத்தாபனத்துக்குள்ள பொதுவான தத்துவங்கள்.*

**11.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபன நோக்கத்திற்காக கொள்வனவுமூலம், கொள்ளுகைமூலம், வாடகைக்கெடுப்பதன்மூலம், கட்டுவதன்மூலம் அல்லது வேறுவகையாகக் காணியை அல்லது கட்டிடங்களை எடுப்பதற்கும் வைத்திருப்பதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஒப்பப்பணங்கள், நன்கொடைகள், மானியக்கொடைகள், மற்றெல்லா வகைப்பட்டனவுமான கொடைகள், சலுகைகள் என்பவற்றைப் பெறுதலும் எடுத்தலும் ;

(இ) எவரேனுமாள் கம்பனி அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் அல்லது வேறு ஏதேனும் தருமச் சங்கம், சபை அல்லது வேறு ஏதேனும் அறக் கொடையினால் வைத்திருக்கப்படும் அல்லது அதற்குச் சொந்தமான அல்லது வைத்திருக்கப்படவுள்ள ஏதேனும் நிலஞ்சார் அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பெற்றுக் கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல், அமுல் படுத்தல், புரிதல் மற்றும் நிருவகித்தல் ;

(உ) நிதியத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் பதவிவிலக்கல், அவர்களது சேவைகளை முடிவுறுத்தல், அத்துடன் நிதியத்தினால் தீர்மானிக் கப்பட்டவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும் பணிக்கொடைகளையும் செலுத்துதல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நலனுக்காக ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**12.** (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானமும் செலவும், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றியதும் கூட்டுத்தாபனத்தின் மற்றைய எல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றியதுமான செம்மையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தானபத்தின் கணக்குகள், தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் "தகுதிவாய்ந்த கணக்காய்வாளர்" என்பது,

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவனத்தின் சபையினால், கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ள தனிநபர் ஒருவர்.

(ii) வதிவிடப் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தின் சபையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கு வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ள கணக்காளர்களின் நிறுவனமொன்று

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பாளர் மற்றும் செயலாளர் அல்லது முகாமைச் சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனுமாளின் முன்னிலையிலன்றியும் எத்தன்மைத்தான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர் தான் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயரை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

உறுப்பினர்களுக்குள்ள பொறுப்புக்களின் வரையறை.

**14.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்துக்கு அத்தகைய உறுப்பினரிடமிருந்து போகுமதியாகக் கூடியவாறான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தை விஞ்சிய ஏதேனும் உதவு தொகையைச் செய்வதற்குப் பொறுப்புடையவராதலாகாது.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**15.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்த பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் நிதியத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது ; ஆனால், அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய ஏதேனும் நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்கும் அத்துடன் எந்த நிறுவனம் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை

அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகளால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அத்தகைய வேறு ஏதேனும் நிறுவனத்துக்குக் கொடுக்கப்படலாம் அல்லது கைமாற்றப்படலாம். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களினால், கலைக்கப்படும்போது அல்லது கலைக்கப்படுவதற்கு முன்னராகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**16.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஜய ஸ்ரீ
சட்டம்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்